This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# தீண்டும் இன்பம்

www.writersujatha.com

"If i can stop one heart form breaking
I shall not live in vain
If I can ease one life the aching
Or cool one pain
Or help one fainting robin
Unto his nest again
I shall not live in vain..."

– Emily Dickinson

"முயற்சிப் பண்ணிப் பார்க்கிறேன்...." என்றாள் அகல்யா. ப்ரமோத் அவளையே.... அவளையே பார்த்து மென்று கொண்டிருக்க, கூந்தலைத் தள்ளிவிட்டுக் கொண்டு, பென்சிலைப் பின்பக்கம் கடித்துக் கொஞ்சம் யோசித்து விட்டு மெல்ல... அடிக்காமல், திருத்தாமல் எழுதினாள்.

"எத்தனை நேரம் நாலு வரிக்கு..?"

அவள் அவனை முறைத்து, "நீயே பண்ணிக்க, போ..." என்றாள். அவளைப் பார்த்தால் பன்னிரண்டு வயசுதான் என்று முதலில் தோன்றும். வீட்டில் இன்னம் அவளை பேபி என்றுதான் கூப்பிடுகிறார்கள். ஆனால், முகத்தில் லேசாகத் தோன்றிய பருவும் திடமான மார்பும் பன்னிரண்டல்ல...

"ஸாரி, ஸாரி.... அகல்யா தி க்ரேட்.... ஐ'ல் கெட் யு ஒன் ஐஸ்க்ரீம் யார்...."

"ஐஸ்க்ரீம் யாருக்கு வேணும்.....?" யாரோ நன்றாக இருக்கிறது என்று சொன்னதற்காகப் புருவத்தின் நடு சென்டரில் மைக்ரோ பொட்டு!

www.writersujatha.com

"பின்ன என்ன வேணும் கண்ணம்மா.....?" கடுகு மலர்நிற சுடிதார்.

"உன் தலை....சே, போ!"

அவன் காத்திருக்க

*"ஒரு இதயம் உடையாமல் நிறுத்த முடிந்தால்*
*நான் வாழ்வது வீணல்ல*
*ஒரு உயிரின் தவிப்பையோ*
*ஒரு வலியையோ குறைக்க முடிந்தால்*
*ஏன் சோர்ந்துவிழும் ராபின் பறவையை*
*கூட்டுக்கு மீட்க உதவினாலே*
*நான் வாழ்வது வீணல்ல...."*

www.writersujatha.com